
# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 02 | Issue: 8 | 4 Pages | 8.8.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 8 | 4 பக்கங்கள் | 8.8.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## வயநாட்டில் உலக தரத்தில் மறுசீரமைப்பு பணிகள்; பினராயி விஜயன் உறுதி



வயநாடு, ஆக. 8

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் கடந்த ஜூலை 30ம் தேதி பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் முண்டக்கை, சூரல்மலை, மேப்பாடி ஆகிய பகுதிகள் அதிகம் பாதிக்கப்பட்டன. கனமழை மற்றும் நிலச்சரிவு என அடுத்தடுத்து பாதிப்பு ஏற்பட்டு மீட்பு பணியும் தொய்வடைந்தது.

நிலச்சரிவால் வீடுகள், சாலைகள், வாகனங்கள், பாலங்கள் வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டன. கிராமத்தினர் பலர் காட்டாற்று வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டனர். பலர் காணாமல் போனார்கள். நிலச்சரிவில் சிக்கி இதுவரை 405 பேர் உயிரிழந்து உள்ளனர். இன்னும் 180 பேரை காணவில்லை.

4,833 பேர் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டு உள்ளனர். 8வது நாளாக மீட்பு பணிகள் இன்று தொடர்ந்து நடைபெற்றது. இந்த நிலையில், கேரள முதல் மந்திரி பினராயி விஜயன் செய்தியாளர்கள் சந்திப்பில் இன்று கலந்து கொண்டார். அவர் பேசும்போது, வயநாட்டில் உலக தரத்திலான மறுசீரமைப்பு பணிகள் உறுதி செய்யப்படும்.

நாட்டுக்கும் இந்த உலகத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கும் வகையிலான ஒரு மறுகுடியமர்த்தும் மாதிரியை உருவாக்குவதே எங்களுடைய இலக்காக இருக்கும் என்றார்.

அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களுடைய சம்பளத்தில் 5 சதவீத தொகையை பேரிடர் நிவாரண நிதிக்கு அளிக்க முன்வந்துள்ளனர் என்றும் பினராயி விஜயன் கூறியுள்ளார்.

.........................................

## வங்காளதேச விவகாரம்: பீகாரில் கண்காணிப்பை பலப்படுத்த போலீசாருக்கு உத்தரவு

பாட்னா, ஆக.8

வங்காள தேச பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்ததை அடுத்து நேற்று மதியம் தனது பதவியை ராஜினாமா செய்து நாட்டை விட்டு தனது தங்கையுடன் வெளியேறினார். தொடர்ந்து இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலம் காசியாபாத்தில் உள்ள ஹிண்டன் விமானப்படை தளத்துக்கு வந்த ஹசீனா, இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார்.

ஷேக் ஹசீனா பதவி விலகிய பிறகும் வங்காள தேசத்தில் வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. அங்கு சிறுபான்மையினர் மீது தொடர் தாக்குதல் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தநிலையில், வங்காள தேசத்தில் நிலவவும் அமைதியின்மை காரணமாக பீகாரில் கண்காணிப்பை பலப்படுத்த போலீசாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கூடுதல் காவல்துறை இயக்குநர் (தலைமையகம்) ஜே.எஸ்.கங்வார் கூறுகையில்,

வங்காள தேசத்தில் நிலவும் அமைதியின்மை காரணமாக அனைத்து மாவட்டங்களில் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும். மத்திய துணை ராணுவப் படையினருடன் ஒருங்கிணைந்து கண்காணிப்பு பணியில் ஈடுபடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

.........................................

## வங்காள தேசத்தில் இந்தியர்களின் நிலைமையை கண்காணித்து வருகிறோம் ஜெய்சங்கர்



புதுடெல்லி, ஆக. 8

வங்காள தேசம் விவகாரம் குறித்து மாநிலங்களவையில் வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது :

இந்தியா வங்காள தேச உறவு என்பது மிகவும்நெருக்கமானது. இந்த நெருக்கம் பல பத்தாண்டுகளாகவும், பல அரசுகளுக்கு இடையேயும் இருந்து வருகிறது. சமீபத்தில் ஏற்பட்டுள்ள வன்முறை அங்கு நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தி இருக்கிறது. ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும் என்ற ஒரே கோரிக்கையுடன் அங்கு போராட்டம் நடைபெற்றது. ஆகஸ்ட் 5 ம் தேதி, ஊரடங்கு உத்தரவையும் மீறி டாக்காவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் குவிந்தனர். பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை செய்த பிறகு ஷேக் ஹசீனாதனது பிரதமர்பதவியை ராஜினாமாசெய்யும் முடிவை எடுத்ததாகத் தெரிகிறது.

மிக குறுகிய நேரத்தில், அவர் இந்தியாவுக்கு வருவதற்கு அனுமதி கோரினார். வங்காள தேச அதிகாரிகளிடமிருந்தும் விமான அனுமதிக்கான கோரிக்கை வந்தது. வங்காள தேசத்தில் நிலைமை மோசமடைந்ததால் அவருக்கு இந்தியா வர அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி நேற்று மாலை அவர் டெல்லி வந்தார்.

வங்காள தேசத்தில் உள்ள சிறுபான்மையினர் தாக்கப்படுவதாக வரும் தகவல்கள் கவலை அளிக்கின்றன. வங்காள தேசத்தில் நடந்த கலவரத்தின்போது சிறுபான்மையினர் குறிவைத்து தாக்கப்பட்டுள்ளனர். அரசு மற்றும் பொது சொத்துக்கள் மீதான தாக்குதல் தொடர்ந்து நடைபெறுகிறது. நாடு முழுவதும் தனி நபர்களின் சொத்துக்கள் தீக்கரையாக்கப்பட்டன.

தூதரகம் மூலமாக வங்காள தேசத்தில் உள்ள இந்தியர்களுடன் நாங்கள் தொடர்பில் இருக்கிறோம். அங்கு 19,000 இந்தியர்கள் அங்கு இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களில் 9 ஆயிரம் பேர் மாணவர்கள். மாணவர்களில் பலர் கடந்த ஜூலை மாதமே இந்தியாவுக்கு திரும்பினர். சிறுபான்மையினரின் நிலை குறித்தும் கண்காணித்து வருகிறோம். அவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்த இந்திய தூதரங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ந்ததற்கு வெளிநாட்டு சதி இருக்கலாம். கடந்த 24 மணி நேரமாக வங்காள தேச அரசுடன் தொடர்ந்து இந்தியா தொடர்பில் உள்ளது. வங்காள தேசத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு தொடர்பாக தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். அண்டை நாட்டில் நிலவும் போராட்டத்தை கருத்தில்கொண்டு எச்சரிக்கையாக இருக்குமாறு எல்லை பாதுகாப்புப்படைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# பெண்களின் பொருளாதார சுதந்திரம் அதிகரித்துள்ளது: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆக. 8

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாநில திட்டக் குழுவின் 5வது கூட்டம் தலைமைச் செயலகத்தில் இன்று காலை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, திட்டக்குழு துணைத் தலைவர் பேரா சிரியர் ஜெயரஞ்சன் மற்றும் திட்டக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இதில் மாநில திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்ட வரைவு கொள்கைகள் மற்றும் அரசின் முன்னோடி திட்டங்களான விடியல் பயணம், இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், மகளிர் உரிமைத் தொகை, மாணவர்களுக்கான திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு முன்னோடி திட்டங்கள் மக்களை சென்றடைந்தது தொடர்பான ஆய்வு முடிவுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக மாநில திட்டக் குழுவால் தயாரிக்கப்பட்ட வரைவு கொள்கைகள் தொடர்பாகவும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:



ஆட்சி சக்கரத்தை இயக்குபவர்களாக நாங்கள் இருந்தாலும், அதற்கு வழிகாட்டுபவர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். நாங்கள் செல்லும் பாதையை தீர்மானிப்பவர்களாக மட்டுமல்லாமல், அதில் உள்ள நிறை குறைகளை எடுத்துச் சொல்பவர்களாகவும் நீங்கள் இருக்கிறீர்கள்.

நீங்கள் ஒவ்வொரு துறையிலும் பல்லாண்டு கால அனுபவம் கொண்டவர்கள். தங்களது அனுபவங்களையும், சிந்தனைகளையும் எங்களுக்கு தொடர்ந்து எடுத்துரைத்து வருகிறீர்கள்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகையால் பெண்களின் பொருளாதார சுதந்திரம் அதிகரித்துள்ளது. அரசு பஸ்களில் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம் மூலம் பெண்களின் சமூக பங்களிப்பு அதிகரித்து உள்ளது.

புதுமைப் பெண் திட்டம் மூலம் கல்லூரிக்கு செல்லும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. காலை உணவுத் திட்டத்தால் மாணவர்கள் வருகையும் பள்ளியில் அதிகரித்துள்ளது.

வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சிக்காக மட்டுமல்லாமல் சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும். திராவிட மாடல் அரசின் ஒவ்வொரு திட்ட மும் சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரையும் மேம்படுத்தும் திட்டமாக உள்ளது.

மாநில திட்டக் குழுவின் அறிக்கைதான் தி.மு.க. அரசின் மதிப்பெண் சான்றிதழ் ஆகும். தொழில் வளர்ச்சி, சமூக மாற்றம், கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும். அதற்கு உங்கள் ஆலோசனைகளையும் வழங்குங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.


இந்தக் கூட்டத்தில் வளர்ச்சி ஆணையர் முருகானந்தம், திட்டம் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ்சந்த் மீனா, நிதித் துறை முதன்மைச் செயலாளர் உதயசந்திரன், குழு உறுப்பினர்கள் பேராசிரியர் இராம.சீனுவாசன், பேராசிரியர் விஜயபாஸ்கர், தீபைந்து, எழிலன் எம்.எல்.ஏ., மருத்துவர் அம லோற்பவநாதன், சித்த மருத்துவர் சிவராமன், முனைவர் நர்த்தகி நடராஜ், மாநில திட்டக் குழு உறுப்பினர் செயலர் சுதா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

..........................................................................

## பீடிசுற்றும் தொழிலாளர்களின் மாத ஓய்வூதியத்தை மாதந்தோறும் ரூ.6000/ ஆக உயர்த்த கோரி அமைச்சரிடம் திருநெல்வேலி பாராளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தல்

தென்காசி ஆக.8

எனது பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட, பாளையங்கோட்டை, மேலப்பாளையம், முக்கூடல், ஆலங்குளம், அம்பாசமுத்திரம் மற்றும் கூடங்குளம் பகுதியில் சுமார் ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் பீடி சுற்றும் தொழில் செய்து வருகின்றனர். திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட பீடி சுற்றும் தொழிலாளர்களின் ஓய்வூதியம் மிக மிக குறைவாக மாதந்தோறும் ரூபாய் 800 பெற்றுவருகின்றனர். இவ் ஓய்வூதியத்தினை மாதந்தோறும் ரூபாய் 6000 ஆக உயர்த்தி வழங்கிட ஆவண செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் அதே போல முக்கூடலில் உள்ள பீடிசுற்றும் தொழிலாளர் நலன் மருத்துவமனையில் புறநோயாளிகள் மட்டும் அனுமதிக்கப்பட்டு, மாலையில் நோயாளிகள் வீட்டிற்கு அனுப்பிவிடுகின்றனர். எனவே, இந்த முக்கூடல் பீடிசுற்றும் தொழிலாளர் மருத்துவமனையினை 24 மணிநேரமும் செயல்பட நடவ



டிக்கை எடுத்திட வேண்டும். தற்போது மேற்படி மருத்துவமனைசரிவரசெயல்படவில்லை. அங்கு ஒன்பது செவலிலியர்கள் நியமிக்கப்பட வேண்டும். முன்பு வேன் மூலம் மருத்துவ சேவையினை, அனைத்து கிராமங்களுக்கும் பீடி தொழிலாளர்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று வழங்கியது போல் மருத்துவ வசதியினை மீண்டும் செய்து தர வேண்டுகிறேன். இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.

..........................................................................

## உலக கைத்தறி தினத்தை முன்னிட்டு, தேசிய தேவாங்கர் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நலத்திட்ட உதவிகள்




திருப்பூர், ஆக. 8

உலக கைத்தறி தினத்தை முன்னிட்டு, தேசிய தேவாங்கர் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, திருப்பூர் கணக்கம்பாளையத்தில், சிறந்த கைத்தறி நெசவாளர்களை அழைத்து, அவர்களை கௌரவித்து, நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டது, இந்த விழாவானது தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநில ஆலோசனை குழு தலைவர் R.ஆசைத்தம்பி ஆலோசனையின் படி, மாநில ஒருங்கிணைப்பு குழு தலைவர் மகேந்திரன் ஒருங்கிணைப்பில், மாநில பொதுச் செயலாளர் முத்து கருப்பண்ணசாமி தலைமையில், மாநில துணைத்தலைவர் வேலுச்சாமி, மாநில துணைப் பொதுச் செயலாளர் மல்லிகார்ஜுனன்ஹிந்திபண்டிட், மாநில பொருளாளர் ஜெயராமன், மற்றும் மாநில நிர்வாக குழு உறுப்பினர்களான, கணக்கம்பாளையம் பிரிவு K, குருநாதன் , இளங்கோ , பாஸ்கரன் , மேட்டுப் பாளையம் சுந்தர்ராஜ் வெள்ளியங்கிரி, பொம்மண்ணன், திருசங்கர் வெங்கடேஷ் மாஸ்கோ நகர் சின்னராஜ் , செல்வபுரம் சரவணன் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது, இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளர்களாக, பட்டயக்காரர் ஆர் ஆர் பாலு செட்டியார் கணக்கம் பாளையம் சௌந்தர்ராஜ் அண்ணன், காந்திநகர் ஆறுமுகம் அண்ணன் அவர்கள், மீனாட்சி நகர் சாமி, என்கிற விசுவநாதன் அவர்கள், பொன்விழா காலனி சுந்தர் அவர்கள், காங்கேயம் ராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர், மற்றும் திரளான தேவாங்கர் சமூகத்தை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.






விழுப்புரம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் தமிழ்ப்புதல்வன் திட்டம் குறித்த கலந்தாய்வு கூட்டம் கலெக்டர் பழனி தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, மாவட்ட சமூக நல அலுவலர் ராஜம்மாள், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ராஜேஷ்வரன், விழுப்புரம் அரசு கலை மற்றும் அறிவியல் கலைக்கல்லூரி முதல்வர் சிவக்குமார் உள்பட பலர் உள்ளனர்.

# உபரி நீர் செல்லும் காவிரி ஆற்றில் சிக்கி தவிக்கும் 7 நாய்களை மீட்க 2வது நாளாக தீவிரம்

மேட்டூர், ஆக. 8

மேட்டூர் அணை கடந்த 30ந் தேதி அதன் முழு கொள்ளளவான 120 அடியை எட்டியது. கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வந்ததால் அணையின் பாதுகாப்பு கருதி 16 கண் மழை கால நீர் போக்கி வழியாக தண்ணீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.



இதற்கிடையே 16 கண் மதகு அருகே காவிரி ஆற்றில் நடுவில் உள்ள மலை குன்றுகளில் 7 நாய்கள் சிக்கிக்கொண்டது. இந்த நாய்களை மீட்க அதிகாரிகளுக்கு மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. சேலம் மாவட்ட கலெக்டர் பிருந்தாதேவி உத்தரவின் பேரில் ராட்சத டிரோன் மூலம் நாய்களுக்கு பிரியாணி வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் தாசில்தார் ரமேஷ் மற்றும் தீயணைப்பு நிலைய அலுவலர் வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் நாய்களை மீட்க புதுப்பாலத்தில் இருந்து கயிறு கட்டி 3 தீயணைப்பு வீரர்கள் கயிறு, தற்காப்பு சாதனம் உள்ளிட்டவைகளை எடுத்து சென்றனர். இருப்பினும் தண்ணீரின் வேகம் அதிகமாக இருப்பதால் தீயணைப்பு வீரர்கள் நாய்கள் இருக்கும் இடத்தை நெருங்க முடியவில்லை.

இதனால் இன்று 2ம் நாள் முயற்சி பலனளிக்காத நிலையில் மீண்டும் தீயணைப்பு வீரர்கள்கயிறு மூலம் திரும்ப வந்தனர். தொடர்ந்து 7 நாய்களையும் மீட்பதற்கு தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் தண்ணீரின் வேகமாக அதிகமாக இருப்பதால் நாய்களை மீட்பதில் பின்னடைவு ஏற்பட்டது.

16 கண் நீர் போக்கியில் தண்ணீர் நிறுத்தினால் மட்டுமே நாய்களை மீட்க முடியும் என்று பொதுமக்கள் கூறி வருகின்றனர். தண்ணீர் திறப்பு நிறுத்தும் வரை நாய்களுக்கு தேவையான உணவுகளை வழங்க வருவாய்த்துறை மற்றும் தீயணைப்பு துறையினர் தொடர்ந்து வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிறை பிடிக்கப்பட்ட 22 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: உறவினர்கள் கோரிக்கை

தூத்துக்குடி, ஆக. 8

தூத்துக்குடி மாவட்டம் தருவைகுளத்தை சேர்ந்தவர் அந்தோணி மகாராஜா (வயது 45). இவருக்கு சொந்தமான விசைப்படகில் அந்தோணி மகாராஜா உள்பட 12 மீனவர்கள் கடந்த மாதம் 21ந் தேதி தருவைகுளத்தில் இருந்து மீன்பிடிக்க சென்று உள்ளனர்.



அதேபோன்று அதே பகுதியை சேர்ந்த அந்தோணி தென்டேனிலா (வயது 23) என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் 10 மீனவர்கள் கடந்த மாதம் 23ந் தேதி தருவைகுளத்தில் இருந்து மீன்பிடிக்க சென்று உள்ளனர். இந்த 2 படகுமீனவர்களும்நேற்று நடுக்கடலில் மீன்பிடித்து கொண்டு இருந்தனர். அப்போது, அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படையினர், இலங்கை எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்ததாக கூறி தருவைகுளத்தை சேர்ந்த 2 விசைப்படகுகளையும் மடக்கி பிடித்தனர். இந்நிலையில் கைது செய்யப்பட்ட தருவைகுளம் மீனவர்கள் 22 பேரும் இலங்கை கடற்படையில் தளத்தில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் கடற்படை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே சிறை பிடிக்கப்பட்ட 22 பேரை விடுதலை செய்யக்கோரியும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிக்கக்கோரியும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மீனவர்களின் உறவினர்கள் மற்றும் தருவைகுளம் ஊராட்சி கூட்டமைப்பினர் இன்று கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.

# அமைச்சர் நேருவிடம் கொந்தளிந்த திமுக கவுன்சிலர்

கோவை, ஆக. 8

கோவை மாநகராட்சி மேயராக தி.மு.க.வைச் சேர்ந்த கல்பனா பதவி வகித்து வந்தார். கடந்த 2 1/4 ஆண்டுகளாக மேயராக இருந்த அவர் கடந்த மாதம் திடீரென தனது பதவியை ராஜினாமா செய்தார்.



இதைத்தொடர்ந்து புதிய மேயரை தேர்வு செய்வதற்கான மறைமுக தேர்தல் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

தி.மு.க. சார்பில் மேயர் வேட்பாளரை தேர்வு செய்யும் கூட்டம் நேற்று அமைச்சர்கள் கே.என். நேரு, முத்துசாமி ஆகியோர் தலைமையில் கோவையில் நடந்தது. இதில் தி.மு.க. கவுன்சிலர்கள் பலர் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் தி.மு.க. மேயர் வேட்பாளராக 29வது வார்டு கவுன்சிலரான ரங்கநாயகி போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, மேயர் தேர்தலில் போட்டியிடுவதற்கு யாரும் மனுத்தாக்கல் செய்யாததால் ரங்கநாயகி, புதிய மேயராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டதாக ஆணையாளர் அறிவித்தார். தொடர்ந்து அவருக்கு வெற்றிச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

முன்னதாக, கோவை மேயர்தேர்தலையொட்டி, இன்று காலை தி.மு.க. கவுன்சிலர்கள் கூட்டம் நடைபெற்றது. அப்போது பணிகள் குழு தலைவரும், கவுன்சிலருமான சாந்தி முருகன், "கட்சிக்காக உழைச்சு ஓடா தேஞ்சுட்டோம். கட்சிக்காக 50 வருஷம் கஷ்டப்பட்டு, கோடிக்கணக்குல இழந்து ஒடுக்கப்பட்டிருக்கோம். சும்மா ஒன்னும் வரலை. இதையெல்லாம் பார்த்து பொறுத்துட்டு இருக்க முடியாது..." என அமைச்சர்கள் கே.என்.நேரு, முத்துசாமி முன்னிலையில் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் கே. என்.நேரு, நீங்கள் பொதுவாக பேசுறீங்க. நீங்கள் எல்லாம் எப்படி உறுப்பினராகி வந்தீங்களோ.. அது மாதிரி தான் நான் சேர்மன் ஆகி இந்த இடத்துக்கு வந்துருக்கேன். உள்ளாட்சிக்கு கடந்த காலத்தில் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்காங்க, தளபதி ஆட்சியில் எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்காங்கன்னு உங்களுக்கு சொல்றேன். கோவைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிங்க என்று முதலமைச்சர் என்னிடம் கேட்டார். அதற்கு 3 கோடி ஒதுக்கியிருக்கோம்னு சொன்னேன், அதற்கு 3 கோடி பத்தாது 300 கோடி ஒதுக்குன்னு முதலமைச்சர் சொன்னார். பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரே நேரத்தில் பத்தாண்டு காலம் நிறுத்தி வைக்கப்பட்ட பணி 2 ஆண்டு காலத்தில் நடக்கணும் என்பது இயலாத காரியம். எனவே உங்களுக்கும் ஆதங்கம் இருக்கும். இப்ப சொல்லியிருக்கிங்க.. அதை செய்து கொடுப்போம்.

உறுதியா செய்கிறோம். அதில் ஒன்றும் மாற்றம் இல்லை என்றார்.

# ஆடிப்பூர பெருவிழாவை யொட்டி திருவையாறு ஐயாறப்பர் கோவிலில் தேரோட்டம்

திருவையாறு, ஆக. 8

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறில் திருக்கயிலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம் மடத்திற்கு சொந்தமான அறம்வளர்த்த நாயகி உடனுறை ஐயாறப்பர் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் ஆண்டுதோறும் ஆடிப்பூர பெருவிழா 11 நாட்கள் சிறப்பாக நடைபெறுவது வழக்கம்.



அதன்படி, இந்த ஆண்டுக்கான ஆடிப்பூர விழா கடந்த மாதம் (ஜூலை) 29 ந்தேதி கொடி யேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில்தினமும்காலை பல்லக்கிலும், மாலை வாகனங்களில் சிறப்பு அலங்காரத்தில் அம்மன் எழுந்தருளி வீதியுலா காட்சி நடைபெற்று வருகிறது.

விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை வெகு விமரிசையாக நடைபெற்றது. முன்னதாக தேருக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு, தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து, அறம் வளர்த்த நாயகி அம்மன் சிறப்பு அலங்காரத்தில் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

இதில் திரளான பெண்கள் கலந்து கொண்டு ஓம் சக்தி.. ஓம் சக்தி... என பக்தி கோஷம் முழக்க தேரை வடம் பிடித்து இழுத்தனர். தேரானது பல்வேறு முக்கிய வீதிகளின் வழியாக பக்தர்கள் வெள்ளத்தில் அசைந்தாடி சென்றது.

தேரானது 4 ரதவீதிகளில் வலம் வந்து நிலையை அடைந்தது.

விழா ஏற்பாடுகளை தருமபுரம் ஆதீனம் 27வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகளின் உத்தரவின் பேரில் கோவில் நிர்வாகத்தினர், பணியாளர்கள் செய்திருந்தனர்.

# கனமழையில் 500 நெல் மூட்டைகள் நனைந்து சேதம்

பண்ருட்டி, ஆஅ. 8

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள சிறுகிராமம், குடுமியான் குப்பம், அங்குசெட்டிப்பாளையம், சிறுவத்தூர், ஏரிப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நெல் அதிகமாக பயிரிடப்படுகிறது. இந்த பகுதியில் அறுவடை செய்யப்படும் நெல் சேமக் கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள அரசு நேரடி நெல் கொள்முதல்நிலையத்திற்கு விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு செல்வது வழக்கம்.



இந்த நிலையில் பண்ருட்டி பகுதியில் நள்ளிரவு வெளுத்து வாங்கிய கன மழை காரணமாக சேமக் கோட்டை அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் மழை நீர் குளம் போல் தேங்கி விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 500 மூட்டை நெல்மணிகள் நனைந்து சேதம் அடைந்தது.

தற்போது மழையில் நனைந்த நெல்மணிகள் அனைத்தும் முளைக்கும் தருவாயில் உள்ளது. இதனைக் கண்டு செய்வதறியாமல் தவித்த விவசாயிகள் ஜே.சி.பி. எந்திரம் மூலம் மழை நீரை வடிகட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இரவு பகல் பாராமல் உழைத்து நெல்மணிகளை அறுவடை செய்து விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட இடத்தில் நனைந்து சேதம் அடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மேலும் பாதுகாப்பான இடத்தில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்து தர வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# குற்றாலம் அருவிகளில் சுற்றுலா பயணிகள் உற்சாக குளியல் சாரல்: மழையால் நீர்வரத்து அதிகரிப்பு

தென்காசி, ஆக. 8

தென்காசி மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள குற்றால அருவிகளில் தண்ணீர் சீராக விழுந்து வரும் நிலையில்,



நேற்று மாலையில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் பெய்த சாரல் மழையின் காரணமாக மெயின் அருவி மற்றும் ஐந்தருவியில் திடீரென தண்ணீர் வரத்து அதிகரித்தது.

இதனால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு நலன்கருதி போலீசார் அருவியில் குளித்துக்கொண்டிருந்த சுற்றுலா பயணிகளை உடனடியாக அபாய ஒலியை எழுப்பி அப்புறப்படுத்தி குளிப்பதற்கு தடை விதித்தனர்.

இதனால் ஐந்தருவி மெயின் அருவியில் குளிக்க முடியாமல் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர். இந்நிலையில் இன்று காலையில் தண்ணீரின் அளவு குறைந்ததை அடுத்து மெயின் அருவி, ஐந்தருவியில் மீண்டும் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டது.

காலையில் குற்றாலம் பகுதியில் லேசான வெயிலுடன் இதமான குளிர்ந்த காற்றும் வீசி வருவதால் பழைய குற்றாலம், மெயின் அருவி, ஐந்தருவி, சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் சீராக விழும் தண்ணீரில் சுற்றுலா பயணிகள் ஆர்வமுடன் குளித்து மகிழ்ந்து வருகின்றனர்.

# கள்ளச்சாராயம் குடித்த மேலும் ஒருவர் உயிரிழப்பு பலி எண்ணிக்கை: 68 ஆக உயர்வு

கள்ளக்குறிச்சி, ஆக. 8

கள்ளக்குறிச்சி கருணாபுரம், சேஷ சமுத்திரம், மாதவச்சேரி ஆகிய பகுதிகளில் கடந்த ஜூன் மாதம் 19ந்தேதி கள்ளச்சாராயம் குடித்ததில் 229 பேர் பாதிக்கப்பட்டனர். இதில் 67 பேர் சிகிச்சை பலன் இன்றி இறந்தனர். 161 பேர் குணமடைந்து வீடு திரும்பினார்கள். கருணாபுரத்தை சேர்ந்த மோகன் (50) மட்டும் புதுச்சேரி ஜிப்மரில் சிகிச்சை பெற்று வந்தார். அவர் சிகிச்சை பலனின்றி இறந்தார். இதனால் கள்ளச்சாராயம் குடித்து பலியானர்களின் எண்ணிக்கை 68 ஆக உயர்ந்தது. கள்ளச்சாராய வழக்கு தொடர்பாக விழுப்புரம் சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்கு பதிவு செய்து 24 பேரை கடலூர் மத்திய சிறையில் அடைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திண்டுக்கல் புனித செபஸ்தியார் கோவில் திருவிழாவில் விடிய விடிய நடக்கும் அசைவ விருந்து

திண்டுக்கல், ஆக. 9

திண்டுக்கல் பழனி சாலையில் முத்தழகுபட்டியில் பழமையான புனித செபஸ்தியார் கோவில் உள்ளது. இங்கு ஒவ்வொரு ஆண்டும் திருவிழா 3 நாட்கள் நடைபெறுவது வழக்கம்.



அதன்படி இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதற்காக செபஸ்தியார் உருவம் பொறித்த கொடி முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு 60 அடி கொடி கம்பத்தில் ஏற்றப்பட்டது.

அப்போது சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் புறாக்களும் பறக்க விடப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆடம்பர கூட்டுத் திருப்பலியும் பக்தர்கள் காணிக்கை வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்த கோவிலில் திருவிழாவுக்கு பல்வேறு ஊர்களைச் சேர்ந்த பொதுமக்கள் வந்திருந்து காணிக்கை வழங்குவது வழக்கம்.

செபஸ்தியாரிடம் ஏதாவது ஒரு வேண்டுகோள் வைத்து அது நிறைவேறியவுடன் காணிக்கையாக ஆடு, கோழி, சேவல், அரிசி மூடை, காய்கறிகள் உள்ளிட்ட பொருட்களை தங்களால் இயன்ற அளவுக்கு வழங்குவார்கள். அவ்வாறு பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய பொருட்களைக் கொண்டே உணவு தயாரித்து அதனை பொதுமக்களுக்கு வழங்குவது வழக்கம்.

அதன்படி இந்த ஆண்டு 150க்கும் மேற்பட்ட ஆடுகளும், 1000க்கும் மேற்பட்ட கோழி மற்றும் சேவல்களும் காணிக்கையாக வழங்கப்பட்டது. இன்று காலை முதல் ஆடுகள், கோழிகள், சேவல்களை உரித்து சுத்தம் செய்யும் பணியில் உள்ளூர் இளைஞர்கள் ஈடுபட்டனர்.

சுத்தம் செய்யப்பட்ட இறைச்சியை பிரம்மாண்ட அண்டாக்களில் சமைத்து செபஸ்தியாருக்கு படையல் போடப்படும். அதன்பிறகு இன்று மதியம் முதல் நள்ளிரவு வரை பக்தர்களுக்கு அசைவ உணவு அன்னதானமாக வழங்கப்படும்.

உணவுதயாரிக்கும் பணியில் நூற்றுக்கணக்கான ஆண்களும், பெண்களும் கலந்து கொண்டனர். வருடம் முழுவதும் நடைபெறும் இந்த வினோத திருவிழாவை காண பல்வேறு ஊர்களில் இருந்தும் பக்தர்கள் வருகை தருவது வழக்கம். அதன்படி இன்று நடக்கும் அன்னதான விருந்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இது குறித்து விழாக்குழுவினர் தெரிவிக்கையில், ஜாதி மத பேதமின்றி சமூக ஒற்றுமையை எடுத்துக்காட்டும் வகையில் புனித செபஸ்தியார் கோவில் திருவிழா 350வது ஆண்டாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்ததிருத்தலத்தில் என்ன வேண்டுதல் வைத்தாலும் அதனை செபஸ்தியார் நிறைவேற்றி தருவார் என்று பக்தர்கள் நம்புகின்றனர்.

தங்கள் வேண்டுதலை நிறைவேற்றிய செபஸ்தியாருக்கு பக்தர்கள் வழங்கும் காணிக்கை பொருட்களைக் கொண்டே அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது என்றனர்.

# 1100 கிலோ குட்கா புகையிலைப் பொருட்கள் பறிமுதல்: 3 பேர் கைது



திருப்பூர், ஆக. 8

திருப்பூர்மங்கலம் பகுதியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் பன்னீர்செல்வம் தலைமையிலான போலீசார் நேற்று இரவு வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது சந்தேகப்படும்படியாக வந்த வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது அதில் மூட்டை மூட்டையாக தமிழகத்தில் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலை பொருட்கள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து வாகனத்தில் இருந்தவர்களை பிடித்து விசாரணை நடத்திய போது அவர்கள் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை தெரிவித்தனர். தொடர்ந்து போலீஸ் நிலையத்துக்கு அழைத்து சென்று விசாரித்த போது அவர்கள் பெங்களூரில் இருந்து குட்கா பொருட்களை மங்கலம் அருகே உள்ள குடோனுக்கு கடத்தி வந்தது தெரியவந்தது.

இதையடுத்து கடத்தலில் ஈடுபட்ட மங்கலத்தை சேர்ந்த பக்ருதீன் (வயது 47), அப்துல் ரஹீம்(43). பொல்லி காளிபாளையத்தை சேர்ந்த முத்து கிருஷ்ணன் (40) ஆகிய 3 பேரையும் கைது செய்தனர். மேலும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனம், 1100 கிலோ குட்கா புகையிலை பொருட்களை பறிமுதல் செய்தனர்.

# நெல்லை அருகே கட்டு கட்டாக ரூ.60 லட்சம் கள்ள நோட்டுகள் பறிமுதல்: 3 பேர் கைது



களக்காடு:, ஆக. 8

மதுரையை சேர்ந்த கும்பல் ஒன்று நெல்லை மாவட்டம் வழியாக கன்னியாகுமரிக்கு ஒரு காரில் வருவதாகவும், அந்த கும்பல் கள்ள நோட்டுக்கள் பதுக்கி வைத்திருப்பதாகவும் நேற்று இரவு மூன்றடைப்பு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

உடனே சப்இன்ஸ்பெக்டர்முருகேஷ்தலைமையிலான போலீசார் மூன்றடைப்பை அடுத்த நெடுங்குளம் விலக்கு பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாக வந்த ஒரு கருப்பு நிற காரை போலீசார் தடுத்து நிறுத்தினர். காரில் இருந்த 3 பேரிடம் விசாரித்தபோது அந்த நபர்கள் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்தனர்.

இதனால் சந்தேகம் அடைந்த போலீசார் அந்த வாகனத்திற்கான ஆவணங்களை சோதனை செய்தபோது அந்த வாகனத்தின் பதிவெண் போலியானது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து அந்த காரை போலீசார் சோதனை செய்தனர்.

அப்போது காரின் பின்புற இருக்கைக்கு அடிப்பகுதியில் ஒரு பெட்டியில் கட்டு கட்டாக 500 ரூபாய் நோட்டுகள் இருந்தது. உடனே அந்த பணத்தை போலீசார் எடுத்து பார்த்தபோது அவை அனைத்தும் கள்ள நோட்டுக்கள் என்பது தெரியவந்தது.

இதையடுத்து காரில் வந்த 3 பேரையும் பிடித்து மூன்றடைப்பு போலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். மேலும் அவர்கள் வந்த கார் மற்றும் பதுக்கி வைத்திருந்த கள்ள நோட்டுகளையும் பறிமுதல் செய்தனர்.

தொடர்ந்து நடத்திய விசாரணையில், அந்த நபர்கள் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கோதைநாச்சியார்புரத்தை சேர்ந்த தங்கராஜ் (வயது 42), அதே பகுதியை சேர்ந்த விஷ்ணு சங்கர், விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள திருத்தங்கல் பாண்டிய நகர் 5வது தெருவை சேர்ந்த சீமை சாமி ஆகியோர் என்பது தெரியவந்தது.

இந்த கும்பல் சமீப காலமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று சில நபர்களை தேர்ந்தெடுத்து அவர்களிடம் பணத்தை இரட்டிப்பாக்கி தருவதாக ஆசை வார்த்தை கூறி வந்துள்ளது.

அதாவது ரூ.1 லட்சம் கொடுத்தால் ரூ.2 லட்சம் தருவதாக கூறி நம்ப வைத்து பணத்தை வாங்கி கொண்டு திரும்ப ரூ.2 லட்சம் வழங்கும்போது அதில் ஒரு கட்டு பணத்தில் மட்டும் நல்ல நோட்டுகளை வைத்துவிட்டு மற்ற கட்டுகளில் கள்ள நோட்டுகளை வைத்து வழங்கிவிட்டு ஏமாற்றி சென்றுவிடுவதை வாடிக்கையாக வைத்துள்ளனர்.

இந்த வகையில் சுமார் 50க்கும் மேற்பட்ட நபர்களை ஏமாற்றி பண மோசடியில் இந்த கும்பல் ஈடுபட்டதும், தற்போது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சென்று அங்கும் மோசடியில் ஈடுபட திட்டமிட்டு இருந்ததும் அவர்களிடம் நடத்திய விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து அந்த கும்பலை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து அசல் நோட்டுகள் ரூ.1 லட்சத்து 13 ஆயிரம் மற்றும் 8 செல்போன்கள், அரிவாள், கத்தி உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்தனர்.

அந்த கும்பலுக்கு கள்ள நோட்டுகள் சப்ளை செய்பவர்கள் யார்? அவர்களாகவே எந்திரம் மூலம் அச்சடிக்கிறார்களா? அப்படியானால் எங்கு வைத்து அதனை செய்கிறார்கள்? இந்த மோசடி கும்பலுக்கு உடந்தையாக முக்கிய பிரமுகர்கள் யாரேனும் இருக்கிறார்களா? என்பது குறித்து 3 பேரிடமும் துருவி துருவி விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சுதந்திர தினத்தையொட்டி திருப்பூரில் தேசிய கொடிகள் தயாரிப்பு பணிகள் தீவிரம்



திருப்பூர், ஆக. 8

வருகிற 15ந்தேதி சுதந்திர தின விழா கொண்டாடப்படுகிறது. இதையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வருகிற 9ந்தேதி முதல் 15 ந்தேதி வரை 'ஹர்கர் திரங்கா எனப்படும் இல்லம்தோறும் தேசியக் கொடி இயக்கத்தின் கீழ் மூவர்ண கொடியை தங்கள் வீடுகளில் ஏற்றி https://harghartiranga.com என்ற இணையதளத்தில் தங்கள் சுயபுகைப்படங்களைப் (செல்பி) பதிவேற்Independence Day, National Flag, சுதந்திர தின விழா, தேசிய கொடிகள்றுமாறு நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதையடுத்து நாடு முழுவதும் சுதந்திர தின விழாவை எழுச்சியாக கொண்டாடுவதற்கு மத்திய, மாநில அரசுகள் மட்டுமின்றி நாட்டு மக்களும் தயாராகி வருகின்றனர். அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வீடுகளில் பட்டொளி வீசி பறக்க தேவையான தேசியக்கொடி தயாரிக்கும் பணி நாடு முழுவதும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் திருப்பூர், கோவை நகரங்கள் தேசியக்கொடிகள் தயாரிப்பில் பிரதான உற்பத்தி மையங்களாக உள்ளன. தற்போது சுதந்திர தினத்திற்காக திருப்பூர், கோவையில் தேசியக்கொடிகள் தயாரிப்பு பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இதுகுறித்து திருப்பூரை சேர்ந்த கொடி உற்பத்தியாளர் மோகன் கூறியதாவது:

சுதந்திர தினத்தையொட்டி தேசியக்கொடிகள் தயாரிக்க அனைவரும் தன்னெழுச்சியாக ஆர்டர்கள் தருகின்றனர். வீடுகள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள், அரசு மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள் என அனைத்து இடங்களிலும் தேசியக் கொடி ஏற்றி, சுதந்திர தினத்தை எழுச்சியாக கொண்டாட உள்ளது எங்களுக்கு கிடைக்கும் ஆர்டர் வாயிலாகவே தெரிய வருகிறது. கடந்த 2 ஆண்டுகளாக வீடுகளில் தேசியக்கொடி ஏற்ற அனுமதி அளித்ததால் ஆர்டர்கள் அதிக அளவில் வருகின்றன. ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த தேசியக்கொடிகளை விற்பனைக்கு அனுப்பி வைத்துவிட்டோம். 9ந்தேதி முதல் தேசியக்கொடிகளை ஏற்றலாம் என்பதால் ஆர்டர் பெற்ற தேசியக்கொடிகளை தயாரிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளோம்.

பல பின்னலாடை நிறுவனங்கள், பல்வேறு பகுதிகளில் இருந்து லட்சக்கணக்கான கொடிகள் தயாரிக்க ஆர்டர் பெற்று தேசியக்கொடியைதைத்து வருகின்றன. 10க்கு 16 இன்ச், 18க்கு 22 இன்ச், 20க்கு 26இன்ச், 20க்கு 40 இன்ச், 40க்கு 60இன்ச் என பல்வேறு அளவுகளில் கொடிகள் தயாரிக்கப்படுகின்றன. ரூ.25 முதல் ரூ.250 வரை தேசியக்கொடிகள் விற்பனை செய்யப்படுகிறது. ஆர்டர்களுக்கு ஏற்றவாறு நீளமான கொடிகளும் தயாரிக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# டிஜிபி சங்கர் ஜிவால் பெயரில் சென்னை பள்ளிக்கு வெடிகுண்டு மிரட்டல்

சென்னை, ஆக. 8

பள்ளிகள்மற்றும்பொது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளுக்கு தொலைபேசியில் வெடிகுண்டு மிரட்டல் விடுவதும், அதை தொடர்ந்து வெடிகுண்டு நிபுணர்கள் மற்றும் போலீசார் விசாரணை மேற்கொள்வதும் தொடர்கதையாகி வருகிறது

இந்நிலையில், டி.ஜி.பி. சங்கர் ஜிவால் பெயரில் இமெயில் மூலம் பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சென்னை ஆர்.ஏ.புரத்தில் உள்ள செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளிக்கு 9வது முறையாக வெடிகுண்டு மிரட்டல்விடுக்கப்பட்டுள்ளது. அதுவும், டி.ஜி.பி சங்கர் ஜிவால் பெயரில் போலி இமெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

தொடர் இமெயில் மிரட்டல் சம்பவம் குறித்து சென்னை மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காஞ்சிபுரம் மாநகராட்சி அதிகாரி வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை




காஞ்சிபுரம், ஆக. 8

காஞ்சிபுரம் மாநகராட்சி நகரமைப்பு பிரிவு அதிகாரி சியாமளா வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். வருமானத்துக்கு அதிகமான சொத்து சேர்த்ததாக எழுந்த புகாரின்பேரில் சியாமளா வீட்டில் சோதனை நடத்தப்பட்டு வருகிறது. காஞ்சிபுரம் மண்டித்தெரு அருகே உள்ள சியாமளா வீட்டில் ஆய்வாளர் கீதா தலைமையில் போலீசார் சோதனை நடத்தப்ப ட்டு வருகிறது.

# கால்நடை மருத்துவப் படிப்புக்கான தரவரிசை பட்டியல் வெளியீடு




சென்னை, ஆக. 8

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் 7 இடங்களில் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த கல்லூரிகளில் கால்நடை மருத்துவம் மற்றும் பராமரிப்பு படிப்புகள் (பி.வி.எஸ்சி. ஏ.ஹெச்.) உள்ளன.

இதைத் தவிர, திருவள்ளூர் மாவட்டம் கோடுவெளியில் உள்ள உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் உணவுத் தொழில்நுட்ப பட்டப்படிப்பு (பி.டெக்),பால்வளத்தொழில்நுட்ப பட்டப்படிப்பு (பி.டெக்), ஒசூர் மத்திகிரியில் உள்ள கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் கோழியின தொழில்நுட்ப பட்டப்படிப்பு (பி.டெக்) உள்பட 3 பட்டப்படிப்புகள் உள்ளன. இந்த 3 பட்டப் படிப்புகளும் 4 ஆண்டுகள் கொண்டவை.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்துக்கு உள்பட்ட சென்னை, நாமக்கல், திருநெல்வேலி, சின்னசேலம், உடுமலைப்பேட்டை, தேனி, ஒரத்தநாடு ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் செயல்படுகின்றன.

இக் கல்லூரிகளில் இளநிலை கால்நடை மருத்துவப் படிப்புக்கு (பிவிஎஸ்சி) 660 இடங்களும், தொழில்நுட்ப பிரிவுகளான பி.டெக். உணவு, பால் (செங்குன்றம் அருகே கொடுவள்ளியில் கல்லூரி அமைந்துள்ளது), கோழியினம் (ஒசூர்) ஆகிய படிப்புகளில் 100 இடங்கள் உள்ளன.

இளநிலை கால்நடை மருத்துவப் படிப்பில் சேர மாணவர்களிடமிருந்து 14,500 விண்ணப்பங்களும், தொழில்நுட்பப் படிப்புகளுக்கு 3,000 விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இளநிலை கால்நடை மருத்துவப் படிப்பிற்கான தரவரிசை பட்டியல் இன்று காலை 10 மணிக்கு வெளியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தரவரிசை பட்டியலை https://adm.tanuvas.ac.in என்ற இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# என்ஜினீயரிங் கல்லூரிகள் போலி கணக்கு: உயர்கல்வித்துறை விரைவில் அறிக்கை சமர்ப்பிக்க முடிவு




சென்னை, ஆக. 8

அண்ணா பல்கலைக்கழகத்தின் இணைப்பு அங்கீகாரம் பெற என்ஜினீயரிங் கல்லூரிகளில் பேராசிரியர்களை போலியாக பணியில் சேர்த்து கணக்கு காட்டிய விவகாரத்தில் ஒரு பேராசிரியர் 22 கல்லூரிகளில் பணியாற்றியதாக விசாரணையில் பதிவுகள் பெறப்பட்டுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விசாரணை அறிக்கை, விரைவில் கவர்னர் மற்றும் தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் இணைப்பு அங்கீகாரம் பெற்ற என்ஜினீயரிங் கல்லூரிகளில் 340 பேராசிரியர்கள் போலியாக பணியில் சேர்ந்ததும், அங்கீகாரம் பெறுவதற்காக ஆய்வின் போது இது போன்ற விஷயங்களில் கல்லூரிகள் ஈடுபட்டதும் வெளியான தகவல்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

ஒரு பேராசிரியர் அதிகபட்சமாக 11 கல்லூரிகள் வரை பணியில் சேர்ந்திருப்பதாக தகவல்கள் வெளியாகி இருந்தன. இந்த முறைகேடு தொடர்பாக, பல்கலைக்கழக வேந்தரும் கவர்னருமான ஆர்.என்.ரவி, அண்ணாபல்கலைக்கழகத்திடம் விளக்கம் கேட்டிருந்தார்.

இதுதொடர்பான, முதல்கட்ட அறிக்கை அண்ணா பல்கலைக்கழகம் தரப்பில் கவர்னர் ஆர்.என். ரவியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த சூழலில், பேராசிரியர்கள் பணி நியமன முறைகேடு தொடர்பாக விசாரணை நடத்த 3 பேர் கொண்ட குழுவை தமிழக உயர்கல்வித்துறைஅமைத்தது. இந்த குழுவினர் தொடர்ந்து விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட பேராசிரியர்களிடமும், கல்லூரிகளிடம் நோட்டீஸ் அனுப்பி விளக்கம் கேட்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், இணைப்பு அங்கீகாரம் பெற போலியாக கணக்கு காட்டப்பட்ட என்ஜினீயரிங் கல்லூரி பேராசிரியர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

ஒரு பேராசிரியர் 22 கல்லூரிகளில் முழுநேர பேராசிரியராக பணியாற்றியதாக பதிவுகள் பெறப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக, பேராசிரியர்கள் மற்றும் கல்லூரிகள் விளக்கம் அளிப்பதற்காக கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் தவறு செய்த கல்லூரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அண்ணா பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. தவறு செய்த கல்லூரிகளின் அங்கீகாரம் ரத்து செய்யவோ, குறிப்பிட்ட காலத்திற்கு மாணவர் சேர்க்கைக்கு தடைவிதிக்கவோ, கல்லூரிகளுக்கு அபராதம் விதிக்கவோ திட்டமிட்டுள்ளதாக அண்ணா பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. விரைவில் விசாரணை அறிக்கை தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி மற்றும் தமிழக அரசிடமும் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

# குளிர்சாதன பெட்டியை திறந்த 5 வயது சிறுமி உயிரிழப்பு

ஆவடி, ஆக. 8

சென்னை ஆவடி நந்தவன மேட்டூர் நேதாஜி தெருவை சேர்ந்தவர் கவுதம் பிரியா தம்பதிகளுக்கு 3 பெண் குழந்தைகள் உள்ளனர். அவர்களது மூத்த மகள் ரூபாவதி (5). ஆவடியில் உள்ள தனியார் பள்ளியில் 1ம் வகுப்பு படித்து வந்தார்.

இந்நிலையில் நேற்று மாலை சிறுமி தனது வீட்டில் இருந்த குளிர்சாதன பெட்டியை திறந்துள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக குளிர்சாதன பெட்டியில் இருந்து மின்கசிவு ஏற்பட்டு சிறுமி ரூபாவதி மீது மின்சாரம் பாய்ந்தது.

இதை பார்த்து அதிர்ச்சியடைந்த சிறுமியின் தாய், குழந்தையை தூக்கிக் கொண்டு ஆவடி அரசு மருத்துவமனைக்கு சென்றார். அங்கு சிறுமியை பரிசோதித்த டாக்டர்கள் ரூபாவதி ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் சிறுமியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். குளிர்சாதன பெட்டியை திறந்த போது மின்சாரம் தாக்கி 5 வயது பெண் குழந்தை உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# மீனாட்சியம்மன் கோவிலை சுற்றி விதிமீறல் கட்டிடங்கள்: நடவடிக்கை எடுக்க கோர்ட்டு உத்தரவு



மதுரை, ஆக. 8

மதுரை அண்ணாநகரைச் சேர்ந்த வழக்கறிஞர் முத்துக்குமார் என்பவர் மதுரை ஐகோர்ட்டு கிளையில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார். அதில் மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் இருந்து 12 மீட்டர் உயரத்திற்கு மேல் கட்டிடங்கள் கட்டக் கூடாது என அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் விதியை மீறி ஏராளமான கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, விதிகளை மீறி 1,800க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளதாக மதுரை மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து வரைபட அனுமதியை மாநகராட்சி வசம் ஒப்படைக்க வேண்டும் எனவும், அதில் விதிமீறல்கள் இருப்பது தெரியவந்தால் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டு, வழக்கு விசாரணையை கோர்ட்டு ஒத்திவைத்தது.

# தவறான செய்திகளை தடுக்க புதிய வாட்ஸ்அப் சேனல் தமிழக அரசு புது முயற்சி




சென்னை, ஆக. 8

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு அரசின் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் இயங்கும் தகவல் சரிபார்ப்பகம் தினமும் சமூக வலைதளங்களில் பரப்பப்படும் வெறுப்புப் பிரசாரங்கள் மற்றும் போலி செய்திகளைக் கண்டறிந்து மக்களுக்கு உண்மையான தகவல்களைத் தரவுகளோடு பதிவிட்டு வருகிறது.

எனவே, சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்திகளின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ள புதிய வாட்ஸ்அப் சேனல் தொடங்கப்பட்டுள்ளது. அதில் உள்ள கியூ ஆர் கோட் குறியீட்டை ஸ்கேன்செய்து பின்தொடரலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மணல் குவாரிகளை திறக்க வலியுறுத்தி இன்று போராட்டம்; லாரி உரிமையாளர்கள் அறிவிப்பு

சென்னை, ஆக. 8


தமிழகத்தில் மூடப்பட்டிருக்கும் மணல் குவாரிகளை திறக்க வலியுறுத்தி வருகிற 8ந்தேதி (நாளை) போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த மணல் மற்றும் சவுடு லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். சட்டவிரோதமாக மணல் அள்ளப்பட்டது கண்டறியப்பட்டதால் 15க்கும் மேற்பட்ட மணல் குவாரிகளை அமலாக்கத்துறையினர் மூடிய நிலையில், பொதுப்பணித்துறையே ஆறுகளில் இருந்து நேரடியாக மணலை எடுத்து ஆன்லைனில் விற்பனை செய்ய வேண்டும் என மதுரை ஐகோர்ட்டு கிளை அறிவுறுத்தியது. இந்த நிலையில், மணல் குவாரிகள் இதுவரை திறக்கப்படாததை கண்டித்து சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் அரங்கில் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிட த்தக்கது.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

8.8.2024

# விக்ரமுக்கு நிகர் வேறு யாருமில்லை மாளவிகா மோகனன்



சீயான் விக்ரம் கதையின் நாயகனாக நடித்திருக்கும் 'தங்கலான்' படத்தின் இசை வெளியீடு சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இதில் நடிகை மாளவிகா மோகனன் பேசுகையில், '' இது எனக்கு மிகவும் உணர்வுபூர்வமான தருணம். தங்கலான் என் இதயத்தின் ஒரு பகுதி. என்னுடைய கலை உலக பயணத்தில் இதற்கு முன் இப்படி ஒரு சிறப்பான கதாபாத்திரத்தை ஏற்று நடித்ததில்லை. இந்த ஒன்றரை ஆண்டு கால பயணம் மிகவும் இனிமையானஅனுபவமாக இருந்தது. இந்ததிரைப்படத்தில் பணியாற்றிய போது மனிதநேயமிக்க கலைஞர்களை சந்தித்தேன்.

ஆரத்தி என்ற கதாபாத்திரத்தை வழங்கியதற்காக இயக்குநர் ரஞ்சித்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என் மீது நம்பிக்கை வைத்து இந்த வேடத்தை வழங்கியதற்காக மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன் இந்திய சினிமாவில் இதுபோன்ற கதாபாத்திரத்தை யாரும் ஏற்று நடிக்கவில்லை என நினைக்கிறேன்.

விக்ரமுடன் இணைந்து பணியாற்றிய தருணங்கள் மறக்க முடியாது. சக நடிகையை சௌகரியமாக ...அக்கறையுடன் .. அரவணைத்து பணியாற்ற வைப்பதில் விக்ரமுக்கு நிகர் வேறு யாருமில்லை.

தங்கலான் ஒரு கூட்டு முயற்சி. இந்த படத்தில் என்னுடன் பணியாற்றிய அனைத்து நட்சத்திர நடிகர்களுக்கும், கலைஞர்களுக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.'' என்றார்.

# நான் இன்னும் அந்த கங்கம்மா கதாபாத்திரத்திலிருந்து மீளவில்லை பார்வதி

சீயான் விக்ரம் கதையின் நாயகனாக நடித்திருக்கும் 'தங்கலான்' படத்தின் இசை வெளியீடு சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

இதில் நடிகை பார்வதி பேசியதாவது:

ஜீ. வி. பிரகாஷ் இந்த படத்திற்காக வழங்கிய இசை, ஒவ்வொரு காட்சியிலும் எங்களின் நடிப்பை மேம்படுத்துவதாகவே இருந்தது. இதற்காக அவருடைய அர்ப்பணிப்பு மிகுந்த உழைப்பிற்கு இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்டுடியோ கிரீன் நிறுவனம், மிகப்பெரிய வெற்றி படங்களை வழங்கிய நிறுவனம். இவர்களுடன் இந்த படத்தை தயாரித்த நீலம் புரொடக்ஷன்ஸ் நிறுவனத்துடனும் இணைந்து பணியாற்றியது மறக்க முடியாது. இயக்குநர் பா. ரஞ்சித்துடன் பணியாற்ற வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை. அந்தக் கனவு இந்த படத்தில் நனவானது. அவருடன் இணைந்து பணியாற்ற ஏற்கனவே வாய்ப்பு கிடைத்தும் என்னால் பல்வேறு காரணங்களால் ஏற்க இயலாதிருந்தது. ஆனால் அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. நான் கங்கம்மாவாகத் தான் இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் படப்பிடிப்பு தளத்தில் அவருக்கு நிறைய நெருக்கடி கொடுத்தேன். கேள்விகளை கேட்டு தொல்லை கொடுத்தேன். ஆனால் அவர் அனைத்துக்கும் விளக்கம் அளித்தார்.

அவர் உருவாக்கிய கங்கம்மா என்ற கதாபாத்திரம் மட்டுமல்ல அவர் உருவாக்கிய உலகம், அரசியல் இதற்கெல்லாம் நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய இயக்கத்தில் கங்கம்மாவாக வாழ ஒரு வாய்ப்பு கிடைத்ததற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இதுவரை 30 படங்களில் நடித்திருக்கிறேன். ஏராளமான நட்சத்திர நடிகர்களுடன் நடித்திருக்கிறேன். உடன் நடிக்கும் சக கலைஞர் மீது அன்பு கொண்டிருக்க வேண்டும். இதனைத் தான் நான் ஒரு கலைஞருக்கான குறைந்த பட்ச தகுதியாக இருக்க வேண்டும் என நினைக்கிறேன். ஆனால் உடன் நடிக்கும் சக கலைஞர்கள் நடிகைகள் நடிகர்கள் மீது பேரன்பு கொண்டவர் சீயான் விக்ரம். நான் கங்கம்மாவாக வாழ வேண்டும் என்றால் அவர் தங்கலானாக வாழ்ந்தால் தான் முடியும். இதற்காக விக்ரமிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர் ஏற்று நடித்த தங்கலான் கதாபாத்திரத்தை இதற்கு முன் யாரும் பார்த்ததில்லை. அவரை திரையில் காண ஆவலுடன் காத்திருக்கிறோம்.

படப்பிடிப்பு தளத்தில் மாளவிகா, பசுபதி போன்றவர்கள் நடிக்கும் போது நான் தூரத்தில் இருந்து தான் பார்த்து ரசித்திருக்கிறேன். படத்தில் என்னுடைய வாரிசுகளாக நடித்த நடிகர்களுடன் ஒரு குழுவாகத் தான் இருப்போம்.

படத்தில் என்னுடன் இணைந்து பணியாற்றிய அனைத்து நட்சத்திர நடிகர்களுக்கும், கலைஞர்களுக்கும் இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சினிமா என்பது பொழுதுபோக்காக இருக்கலாம். வெற்றியைப் பெறலாம். நம் வாழ்க்கை எப்போதும் அரசியலுடன் தான் இருக்கிறது. நாம் எதை செய்தாலும் அது அரசியல். அந்த வகையில் 'தங்கலான்' ஆகஸ்ட் 15 ஆம் தேதி அன்று வெளியாவது தற்செயலானது அல்ல. சுதந்திரம், விடுதலை பற்றி நிறைய பேசுகிறோம். இதனை தொடர்ந்து பேச வேண்டும். பாகுபாடு என்பது இன்றும் ஏன் இருக்கிறது என்று குறித்தும் பேச வேண்டும். இதைப்பற்றி நாம் தொடர்ந்து வாசித்துக் கொண்டே இருக்க வேண்டும் இதில் எவ்வளவு அசௌகரியம் இருந்தாலும்.. ஏனெனில் சினிமா என்பது அரசியல். கலை என்பதும் அரசியல். .இதற்காக ரஞ்சித் ஒரு ஆர்மியையே வைத்திருக்கிறார். அவருடைய படை வீரர்களுக்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். நன்றி'' என்றார்.

# இரு மாறுபட்ட வேடங்களில் தளபதி விஜய் 'கோட்' இறுதி கட்ட பணிகள் மும்முரம்



தென்னிந்திய சினிமாவின் முன்னணி நிறுவனமான ஏஜிஎஸ் எண்டர்டெயின்மெண்ட்டின் கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ். கணேஷ் மற்றும் கல்பாத்தி எஸ். சுரேஷ் ஆகியோரின் தயாரிப்பில் 25வது திரைப்படமும் தளபதி விஜய்யின் 68வது படமுமான 'கோட்' ('தி கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம்') படப்பிடிப்பு மற்றும் டப்பிங் நிறைவடைந்து இறுதி கட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில் உலகெங்கும் உள்ள திரையரங்குகளில் செப்டம்பர் 5 அன்று வெளியாகிறது 'கோட்'.

இப்படத்திற்காக ஏஜிஎஸ் எண்டர்டெயின்மென்ட் நிறுவனத்துடன் இரண்டாவது முறையாகவும், இயக்குநர் வெங்கட் பிரபு உடன் முதல் முறையாகவும் இசை அமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா உடன் இரண்டாவது முறையாகவும் தளபதி விஜய் இணைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா, தாய்லாந்து, இலங்கை, துனிசியா, தில்லி, ஹைதராபாத், புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட இடங்களில் நடைபெற்ற படப்பிடிப்பில் தளபதி விஜய் மற்றும் முன்னணி நட்சத்திரங்கள் கலந்து கொண்டனர். பிரபல நடிகர்களான பிரசாந்த், பிரபுதேவா, ஜெயராம், சினேகா, லைலா, அஜ்மல் அமீர், மீனாக்ஷி சௌத்ரி, வைபவ், யோகி பாபு, பிரேம்ஜி அமரன், விடிவி கணேஷ், யுகேந்திரன் வாசுதேவன், அரவிந்த் ஆகாஷ், அஜய் ராஜ், பார்வதி நாயர், அபியுக்தா மணிகண்டன் (அறிமுகம்) உள்ளிட்டோர் நடிக்கும் 'கோட்' படத்தில் மோகன் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார்.

இப்படத்தின் முதல் பாடலான விசில் போடு மற்றும் இரண்டாவது பாடலான சின்ன சின்ன கண்கள் வெளியாகி ரசிகர்களின் பெரும் வரவேற்பை பெற்றிருந்த நிலையில், மூன்றாவது பாடலான ஸ்பார்க் கடந்த சனிக்கிழமை அன்று வெளியிடப்பட்டு லைக்குகளையும் இதயங்களையும் இணையத்தில் அள்ளி வருகிறது. விஜய் ரசிகர்கள்மட்டுமின்றிஇசைரசிகர்கள்அனைவரையும்இப்பாடல்கள்கவர்ந்துள்ளன.'கோட்'திரைப்படத்திற்காக முதல் இரண்டு பாடல்களை பாடி உள்ளார் தளபதி விஜய்.

மிகுந்த பொருட்செலவில் உருவாகி உள்ள இப்படத்தில் முற்றிலும் மாறுபட்ட இரு வேடங்களில் தளபதி விஜய் நடித்துள்ளார். இதற்காக அமெரிக்கா சென்ற அவர், அதி நவீன தொழில்நுட்பத்தின் மூலம் தனது உடல் அமைப்பு, தோற்றம், அசைவுகள் உள்ளிட்டவற்றை துல்லியமாக பதிவு செய்தார். 'அவெஞ்சர்ஸ்' உள்ளிட்ட பிரம்மாண்ட ஹாலிவுட் படங்களுக்கு வி எஃப் எக்ஸ் செய்த லோலா நிறுவனம் 'கோட்' திரைப்படத்தின் சிறப்பு காட்சிகளில் பங்காற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது.


இப்படத்தின் கிரியேட்டிவ் தயாரிப்பாளராக அர்ச்சனா கல்பாத்தி பணியாற்றுகிறார். 'பிகில்' திரைப்படத்தின் மாபெரும் வெற்றிக்குப் பிறகு, தளபதி விஜய்யுடன் இரண்டாவது முறையாக அவரது 68வது படமான 'கோட்' திரைப்படத்திற்காக ஏஜிஎஸ் எண்டர்டெயின்மென்ட் இணைந்துள்ளது. இதுவரை இந்நிறுவனம் தயாரித்துள்ள திரைப்படங்களிலேயே மிக பிரம்மாண்டமான வகையில் 'கோட்' உருவாகி உள்ளது.

அனைத்து பார்வையாளர்களாலும் விரும்பப்படும் சிறந்த பொழுதுபோக்கு படமாக சர்வதேச தரத்தில் உருவாகி உள்ள 'கோட்' படத்தில் பெரும் நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளது. சித்தார்தா நுனி ஒளிப்பதிவு செய்ய, ராஜீவன் கலை இயக்கத்தை கவனிக்க, வெங்கட் ராஜன் படத்தொகுப்புக்கு பொறுப்பேற்க, திலீப் சுப்பராயன் சண்டை காட்சிகளை வடிவமைத்துள்ளார். 'ஜவான்', 'புஷ்பா' மற்றும் 'கல்கி' ஆகிய படங்களில் பணியாற்றிய



ப்ரீத்தி ஷீல் சிங் டிசோசா மற்றும் குழுவினர் 'கோட்' திரைப்படத்தின் கேரக்டர் வடிவமைப்பு மற்றும் ஒப்பனையை செய்துள்ளனர். உடைகளை பல்லவி சிங் மற்றும் வாசுகி பாஸ்கர் வடிவமைத்துள்ளனர். பாடல் வரிகளை மதன் கார்க்கி, கபிலன் வைரமுத்து, விவேக் மற்றும் கங்கை அமரன் எழுதியுள்ளனர். ராஜு சுந்தரம், சதீஷ், சேகர் உல்லி வி ஜே நடனம் அமைத்துள்ளனர். நிர்வாக தயாரிப்பு: எஸ். எம். வெங்கட் மாணிக்கம். அசோசியேட் கிரியேட்டிவ் தயாரிப்பாளர்: ஐஸ்வர்யா கல்பாத்தி. ஏஜிஎஸ் எண்டர்டெயின்மென்ட் சார்பாக கல்பாத்தி எஸ். அகோரம், கல்பாத்தி எஸ். கணேஷ் மற்றும் கல்பாத்தி எஸ். சுரேஷ் தயாரித்துள்ள இப்படத்தின் கிரியேட்டிவ் தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி ஆவார்.

# மாரத்தான் நடை பந்தயம் கலப்பு அணிகள் பிரிவு: இந்தியாவின் சூரஜ் பன்வார் பிரியங்கா ஏமாற்றம்



பாரீஸ் ஒலிம்பிக்கின் தடகள போட்டியில் இன்று காலை கலப்பு அணிகள் பிரிவுக்கான மாரத்தான் நடை பந்தயம் நடைபெற்றது. இதில் இந்தியா சார்பில் சூரஜ் பன்வார் பிரியங்கா ஜோடி கலந்து கொண்டது.

மொத்தம் 25 ஜோடிகள் கலந்து கொண்டனர். இதில் ஸ்பெயின் ஜோடி அல்வாரோ மார்ட்டின் மரியா பெரேஸ் ஜோடி பந்தய தூரத்தை 2 மணி நேரம் 50 நிமிடம் 31 வினாடிகளில் கடந்து தங்கம் வென்றது.

ஈகுவடாரின்பிரையன்டேனியல்பின்டாடோகிளெண்டா மோர்ஜோன் ஜோடி 2 மணி நேரம் 52 நிமிடம் 22 வினாடிகளில் கடந்து வெள்ளி பதக்கம் வென்றது.

ஆஸ்திரேலியாவின் ரிடியான் கவ்லே ஜெமிமா மோன்டேஜ் ஜோடி 2 மணி நேரம் 51 நிமிடம் 38 வினாடிகளில் கடந்து வெண்கல பதக்கம் வென்றது.

இந்திய ஜோடி பந்தய தூரத்தை எட்ட முடியாமல் இடையிலேயே வெளியேறி கடைசி இடத்தை பிடித்தது. அதே போல் செக்குடியரசு ஜோடியும் பந்தய தூரத்தை முடிக்க முடியாமல் இடையிலேயே வெளியேறியது.

# வினேஷ் போகத்திடம் தோல்வியடைந்த கியூப வீராங்கனை இறுதிப்போட்டிக்கு தகுதி



ஒலிம்பிக் விளையாட்டு தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்று வருகிறது.

இதில், நேற்றிரவு நடைபெற்ற மல்யுத்தம் பெண்கள் 50 கிலோ எடைப் பிரிவுக்கானஅரையிறுதி போட்டியில், இந்திய வீராங்கனை வினேஷ் போகத், கியூபா வீராங்கனை குஸ்மானை வீழ்த்தி இறுதிசுற்றுக்கு தகுதி பெற்றார்.

இறுதிப் போட்டியில் இந்திய வீராங்கனை வினேஷ் போகத் அமெரிக்காவை சேர்ந்த சாரா ஹில்டெப்ரண்ட்ஐ எதிர்கொள்ள இருந்தார். இந்த நிலையில், வினேஷ் போகத் உடல் எடை சில கிராம்கள் வரைகூடி இருப்பதால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக ஒலிம்பிக் கமிட்டி அறிவித்துள்ளது.

இந்நிலையில், வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டதால், அரையிறுதியில் அவரிடம் 5 0 என்ற கணக்கில் தோல்வியடைந்த கியூப வீராங்கனை குஸ்மான் இறுதிப்போட்டிக்கு விளையாட தகுதி பெற்றுள்ளார்.

அதே சமயம் வினேஷ் போகத்தின் தகுதி நீக்கத்திற்கு எதிராக முறையீடு செய்துள்ளதாக இந்திய ஒலிம்பிக் சம்மேளனம் தெரிவித்துள்ளது

# முதல் அசாம் வீரர்: இந்திய ஒருநாள் போட்டியில் அறிமுகமான ரியான் பராக்



இலங்கை இந்தியா அணிகளுக்கு இடையேயான கடைசி ஒருநாள் போட்டி இன்று கொழும்புவில் நடைபெறுகிறது. இந்த போட்டியில் டாஸ் வென்ற இலங்கை அணி பேட்டிங்கை தேர்வு செய்து விளையாடி வருகிறது. இந்த போட்டியில் கேஎல் ராகுல் மற்றும் அர்ஷ்தீப் சிங் ஆகியோர் நீக்கப்பட்டனர். அவர்களுக்கு பதிலாக ரியான் பராக், ரிஷப் பண்ட் ஆகியோர் அணியில் இடம் பெற்றனர். இந்த போட்டியில் அறிமுக வீரராக ரியான் பராக் களமிறங்குகிறார். இந்திய அணியின் ஒருநாள் கிரிக்கெட்டில் அறிமுகமாகும் 256 வீரர் ஆவார். அவருக்கு நட்சத்திர வீரர் விராட் கோலி தொப்பி வழங்கினார்.

இந்திய ஒருநாள் அணிக்கு தேர்வான முதல் அசாம் மாநில வீரர் ரியான் பராக் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் மல்யுத்தம்: கிராம்களில் கூடிய உடல் எடை: வினேஷ் போகத் தகுதிநீக்கம்



ஒலிம்பிக் விளையாட்டு தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்று வருகிறது. இதில், இந்தியா இதுவரை 3 வெண்கல பதக்கங்கள் வென்று பதக்க பட்டியலில் 63 ஆவது இடத்தில் உள்ளது. இதில், நேற்றிரவு நடைபெற்ற மல்யுத்தம் பெண்கள் 50 கிலோ எடை பிரிவுக்கான அரையிறுதி போட்டியில், இந்திய வீராங்கனை வினேஷ் போகத், கியூபா வீராங்கனை யூஸ்னிலிஸ் குஸ்மான் லோபன் மோதினர். இந்த போட்டியில் இந்திய வீராங்கனை வினேஷ் போகத் கியூபா வீராங்கனை குஸ்மானை 50 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தி அபார வெற்றிபெற்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஒலிம்பிக் மல்யுத்தம் பெண்கள் 50 கிலோ எடை பிரிவில் இந்தியாவின் வினேஷ் போகத் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இதன் மூலம் இந்தியாவிற்கு குறைந்தபட்சம் வெள்ளிப்பதக்கம் உறுதியாகி விட்டது. இறுதிப்போட்டி இன்று நடைபெற இருக்கிறது. இறுதிப் போட்டியில் இந்திய வீராங்கனை வினேஷ் போகத் அமெரிக்காவை சேர்ந்த சாரா ஹில்டெப்ரண்ட்ஐ எதிர்கொள்ள இருந்தார். இந்த நிலையில், வினேஷ் போகத் உடல் எடை சில கிராம்கள் வரை கூடி இருப்பதால் அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

# ஒலிம்பிக் ஹாக்கி: அரையிறுதியில் இந்தியா அதிர்ச்சி தோல்வி



ஒலிம்பிக் விளையாட்டு தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்று வருகிறது. இதில், இந்தியா இதுவரை 3 வெண்கல பதக்கங்கள் வென்று பதக்க பட்டியலில் 63 ஆவது இடத்தில் உள்ளது. இந்நிலையில், ஒலிம்பிக் ஆடவர் ஹாக்கி அரையிறுதி போட்டி நேற்றிரவு நடைபெற்றது. இதில், இந்தியா மற்றும் ஜெர்மனி அணிகள் மோதின.

துவக்கம் முதலே பரபரப்பாக நடைபெற்ற இந்த போட்டியின் 7 ஆவது நிமிடத்தில் இந்திய வீரர் ஹர்மன் பிரீத் கோல் அடித்தார். இதையடுத்து, ஆட்டத்தில் 18 ஆவது மற்றும் 27 ஆவது நிமிடங்களில் ஜெர்மனி வீரர்கள் கோல் அடித்தனர்.

இதனால் போட்டி விறுவிறுப்பானது. இந்திய வீரர்கள்பதில்கோல்அடிக்கும்முயற்சியைதீவிரப்படுத்தினர். இதற்கு பலன் அளிக்கும் வகையில், போட்டியின் 36 ஆவது நிமிடத்தில் இந்திய வீரர் சுக்ஜீத் சிங் கோல் அடித்தார். இதனால், இரு அணிகளும் 22 என்ற சமநிலையில் இருந்தன.

இதையடுத்து இரு அணி வீரர்களும் மற்றொரு கோல் அடித்து வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் விளையாடினர். இறுதியில் போட்டியன் 54 ஆவது நிமிடத்தில் ஜெர்மனி வீரர் கோல் அடித்தார். இதனால், ஜெர்மனி 3 கோல்கள் என முன்னிலை பெற்றது.

இந்திய வீரர்கள் பதில் கோல் அடிக்க தீவிரம் காட்டினர். எனினும், அவர்களால் கோல் அடிக்க முடியவில்லை. இறுதியில் ஜெர்மனி 32 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வீழ்த்தி வெற்றிபெற்றுள்ளது. இதன் மூலம் ஜெர்மனி அணி ஒலிம்பிக் ஹாக்கி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

அரையிறுதி சுற்றில் தோல்வி அடைந்த இந்தியா அணி இன்று நடைபெற உள்ள வெண்கல பதக்கத்திற்கான போட்டியில் ஸ்பெயின் அணியை எதிர்கொள்ள இருக்கிறது. இந்த போட்டி இந்திய நேரப்படி இன்று மாலை 5.30 மணிக்கு துவங்குகிறது.



**சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈத லியையாக் கடை**

**விளக்கம்:**

**சாவதை விடத் துன்பமானது வேறொன்றும் இல்லை, ஆனால் வறியவர்க்கு ஒரு பொருள் கொடுக்கமுடியாதநிலைவந்தபோதுஅச்சாதலும் இனியதே ஆகும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.